# BSNL உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புக் குழு
# தமிழ் மாநிலம்

---

**முத்திரை பதித்த மூன்றாவது தமிழ் மாநில மாநாடு!**
**பாண்டிச்சேரி - 15.07.2018**

பாரதியும், பாரதிதாசனும் இந்திய விடுதலை வேட்கையையும், தமிழையும், பெண்ணுரிமையையும் வளர்த்த புதுச்சேரி மண்ணில், BSNL உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் மூன்றாவது தமிழ் மாநில மாநாடு, 15.7.2018 ஞாயிற்றுக் கிழமை அன்று, நவீனா திருமண மண்டபத்தில், தோழியர். ஜியோத்சனா மொகாஷி நினைவரங்கத்தில் வெற்றிகரமாக நடந்தேறியது.

திருச்சி தோழியர். பூம்பாவை அவர்கள் பாடிய பெண்ணுரிமைப் பாடலுடன் துவங்கிய கலை நிகழ்ச்சிகளில் மாநிலக் குழு உறுப்பினர் தோழியர். சரோஜாதேவி, பாரதியாரின் பாஞ்சாலி சபதக் கவிதையை கம்பீரமான பாவங்களுடன் வசனமாக வழங்கினார். தொடர்ந்து அவர் தமிழக கிராமீய பாடல்களுக்கு நடனமாடத் துவங்க, 40-க்கும் மேற்பட்ட பெண்கள் கும்மி நடனத்துடன் உற்சாகமாகப் பங்கேற்ற ஆட்ட பாட்டத்துடன் மாநாட்டின் துவக்கம் களை கட்டியது. அரங்கமே அதிர்ந்த இந்நடன நிகழ்ச்சியில் மூத்த தோழியர். பங்கஜவல்லி, தனம்மாள், பிரேமா மற்றும் பெர்லின் உள்ளிட்டோருடன் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

பின்னர், தோழியர் பிரேமாவின் எழுச்சி முழக்கங்களுடன் தேசீயக் கொடியை மாநிலக் குழு உறுப்பினர் தோழியர். கே.பங்கஜவல்லி ஏற்றி வைத்தார். தோழியர். பெர்லின் ஆலிஸ் மேரியின் விண்ணதிரும் முழக்கங்களுக்கிடையே சங்கக் கொடியை அகில இந்திய இணை அமைப்பாளர் தோழியர் வி. பாக்யலஷ்மி ஏற்றி வைத்தார். புதுச்சேரி ஒப்பந்தத் தொழிலாளர் தோழியர். கவிதாவின் உணர்ச்சி மிகுந்த முழக்கங்களுக்கிடையே தியாகிகள் ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

தோழியர். டி.பிரேமா, என்.ராஜேஸ்வரி, வள்ளி ஆகியோரைக் கொண்ட தலைமைக் குழு மாநாட்டை சிறப்பாக வழிநடத்தியது. அஞ்சலிப் பாடலை மாநிலக் குழு உறுப்பினர் தோழியர். பெர்லின் உருக்கமான முறையில் பாட, அஞ்சலி தீர்மானத்தை மாநிலக்குழு உறுப்பினர் தோழியர். எம். மல்லிகா முன்மொழிந்தார். ஒரு நிமிட மௌன அஞ்சலிக்குப் பிறகு, வரவேற்புக் குழுவின் கௌரவத் தலைவரும், ஆசிரியர் கூட்டணியின் புதுச்சேரி மாநிலச் செயலாளராகப் பணியாற்றியவருமான தோழியர் என்.வத்சலா புதுச்சேரி மாநில போராட்ட வரலாற்றை எடுத்துக் கூறி அனைவரையும் வரவேற்றார்.

ஓயாத பெண்ணுரிமைப் போராளியும், சமூகப் போராளியும், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவருமான தோழர். உ.வாசுகி கம்பீரமான உரை நிகழ்த்தி மாநாட்டைத் துவக்கி வைத்தார். பெண் ஊழியர்களை இழிவு படுத்தி குமுதம் இதழ் வெளியிட்டிருந்த நகைச்சுவைத் துணுக்குக்கு எதிராக மாதர் சங்கம் இயக்கம் நடத்தி, குமுதம் ஆசிரியர் குழுவைச் சந்தித்து கண்டனம் தெரிவித்த போது, BSNL பெண் ஊழியர்கள் பெரும் பங்காற்றியதை நினைவு கூர்ந்த அவர், பெண்ணுரிமை இயக்கங்களில் BSNL பெண் ஊழியர்கள் ஆற்றி வரும் பங்கைப் பாராட்டினார். ஒப்பந்தத் தொழிலாளர்களின் பிரச்னைகளை விளக்கி அவர்களை அணிதிரட்ட வேண்டிய தேவையை விளக்கினார். நாடெங்கும் நடந்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எடுத்துரைத்த அவர், தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தில் மரணமடைந்த பெண்களின் மீதான கொடூர தாக்குதலையும், இளம் வயதிலேயே சமூகத்திற்காகப் போராடி இறந்த ஸ்னோலின் கவிதைகளையும் சுட்டிக் காட்டி, எட்டுவழிச் சாலை, கோவை குடிநீர் வழங்க சூயஸ் நிறுவனத்திற்கு அனுமதி, தனியார் மயமாகும் போது குடிநீர் முழுமையாக கட்டண மயமாதல் உள்ளிட்ட பிரச்னைகளையும் விளக்கி, பெண் ஊழியர்கள் தங்கள் பிரச்னைகளுக்காகப் போராடுவதோடு, பொதுப் பிரச்னைகளுக்காக வீதியில் வந்து போராடத் தயாராக வேண்டும் என்று அறைகூவி தனது உரையை நிறைவு செய்தார்.

பின்னர் சிறப்புரையாற்றிய அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். பி.அபிமன்யு, பெண் ஊழியர் பிரச்னைகளையும், BSNL ஊழியர் சங்கம் எடுத்துள்ள உறுதியான நடவடிக்கைகளையும், அகில இந்தியக் குழு அமைக்கப் பட்டதையும், அகில இந்திய கருத்தரங்கம், நிர்வாகத்தோடு சந்திப்பு ஏற்பாடு உள்ளிட்டவற்றை விளக்கியதோடு, எதிர்காலத்திலும் பெண் ஊழியர் பிரச்னைகளுக்கு BSNL ஊழியர் சங்கம் முக்கியத்துவம் கொடுக்கும் என உறுதியளித்து, ஊதிய மாற்றம், டவர் கம்பெனி பிரச்னை, 4-ஜி ஸ்பெக்ட்ரம், செப்டம்பர் 5 பேரணி, இல்லம் தேடி இயக்கம், ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்னைகள் என பல்வேறு அம்சங்களை விளக்கி உரையாற்றினார்.

அடுத்து வாழ்த்துரை வழங்கிய அகில இந்திய இணை அமைப்பாளர் தோழியர். வி.பாக்யலஷ்மி (கேரளா), மத்திய அரசாங்கத்தின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, பொதுத் துறை விரோத கொள்கைகளை விளக்கியதோடு, மக்களையும், தொழிலாளர்களையும் மத துவேஷம் ஊட்டி பிளவுபடுத்துகின்ற மத தீவிர வாதத்திற்கு எதிராக பெண்கள் அணி திரள வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

அகில இந்திய உதவிப் பொதுச் செயலாளரும், மாநிலத் தலைவருமான தோழர். எஸ்.செல்லப்பா, தமிழ்நாடு தொலைத் தொடர்பு ஒப்பந்தத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர். சி.வினோத்குமார் ஆகியோரும் செழுமையான கருத்துக்களைத் தெரிவித்து வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர், மாநில அமைப்பாளர் தோழியர். ப.இந்திரா வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கை மீது பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 தோழியர் சிறப்பான கருத்துக்களை விவாதத்தில் முன் வைத்தனர். தொகுப்புரைக்குப் பிறகு அறிக்கை ஏகமனதாக ஏற்கப் பட்டது.

**பின்னர், புதிய மாநிலக் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.**

**தோழியர் -**

1. **டி. பிரேமா (சென்னை)**
2. **வி. சீதாலஷ்மி (நெல்லை)**
3. **ப. இந்திரா ( நாகர்கோவில்)**
4. **பெர்லின் ஆலிஸ் மேரி (நாகர்கோவில்)**
5. **மகுடேஸ்வரி (கோவை)**
6. **எம்.எஸ்.விஜயலஷ்மி (திருப்பூர்- கோவை)**
7. **டி. சியாமளா (ஈரோடு)**
8. **ஆர். அபிராம சுந்தரி (சேலம்)**
9. **எம். மல்லிகா (திருச்சி)**
10. **சுமதி (மதுரை)**
11. **கமல சரஸ்வதி (கும்பகோணம்)**
12. **சரோஜாதேவி (கடலூர்)**
13. **பிரதீபா CL (புதுச்சேரி)**
14. **வள்ளி CL (மதுரை)**
15. **சரஸ்வதி CL (திருப்பூர்-கோவை)**
16. **ஆர். சந்தான செல்வி CL (தூத்துக்குடி)**
17. **ஆர். ஜோதி CL (விருதுநகர்)**

**மாநில அமைப்பாளராக தோழியர். பெர்லின் ஆலிஸ் மேரியும், இணை அமைப்பாளர்களாக தோழியர். வி. சீதாலஷ்மி, மகுடேஸ்வரி, கமல சரஸ்வதி, பிரதீபா ஆகியோரும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.**

**புதிய மாநிலக் குழுவிற்கும், நிர்வாகிகளுக்கும் தமிழ் மாநில சங்கத்தின் வாழ்த்துக்கள்!**

மூத்த தோழியர் கே.பங்கஜவல்லி, பி.தனம்மாள், ஜி.தினமணி மற்றும் பதவி உயர்வு பெற்ற தோழியர். எம்.மல்லிகா ஆகியோரின் பணிகளைப் பாராட்டி அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர். பி.அபிமன்யு கதராடை அணிவித்து கௌரவித்தார். மாநிலச் செயலாளர் தோழர். ஏ.பாபு ராதாகிருஷ்ணன், மூத்த தோழியர் சரோஜா அவர்களுக்கு கதராடை அணிவித்து கௌரவித்தார். மாநாட்டில் கலந்து கொண்ட மூத்த தோழியர் சரோஜா (கோவை) இள வயது பிரதிநிதிகளிடம் செங்கொடியை ஒப்படைத்தார்.

BSNL நிறுவனத்தின் பாதுகாப்பு குறித்தும், அதற்கான போராட்டங்களிலும், அனைத்து தொழிற்சங்க அறைகூவலான “உங்கள் இல்லம் தேடி BSNL “ இயக்கத்திலும் அனைத்து பெண் ஊழியர்களும் பங்கேற்கவும் கோரி தீர்மானம், பெண் ஊழியர் பிரச்னைகள் குறித்த தீர்மானம், ஒப்பந்த மற்றும் பயிற்சியாளர் பிரச்னைகள் குறித்த தீர்மானம், பெண்கள் மீதான வன்முறைகளைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கக் கோரும் தீர்மானம், நீட் தேர்வு, எட்டு வழிச் சாலை, கோவை குடிநீர் வழங்க தனியார் நிறுவனத்திற்கு அனுமதியைக் கைவிடக் கோருதல் உள்ளிட்ட பொதுப் பிரச்னைகளுக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தோழியர். கமல சரஸ்வதியைக் கன்வீனராகக் கொண்டு பணியாற்றிய தீர்மானக் குழு உறுப்பினர்கள் தோழியர். சியாமளா, ஆர்.லதா மற்றும் மாநிலச் சங்க நிர்வாகிகள் தோழர் எஸ்.சுப்ரமணியன், தோழர் என்.சக்திவேல் ஆகியோர் தீர்மானங்களை வடிவமைத்தனர். தோழியர் சூர்யகலா தீர்மானங்களை முன்மொழிந்தார். புதுச்சேரி தோழியர். கலாராணி, பிரதீபா, கவிதா மற்றும் தகுதி ஆய்வறிக்கையை சிறப்பாக செய்து தந்த தோழர். எம்.ஜி. ராஜேந்திரன், மூத்த தோழர் சக்திவேல், தோழியர். வி. சீதாலஷ்மி ஆகியோருடன் பிரதிநிதிகள் பதிவுக் குழு சிறப்பாக செயல்பட்டது. தோழியர். பி.தனம்மாள், ஜி.களஞ்சியம் உள்ளிட்ட குழு நிகழ்ச்சிகளை பதிவு செய்து தந்தனர். தோழியர். கவிதாவின் நன்றியுரையோடும், முழக்கங்களோடும் மாநாடு நிறைவுற்றது.

மாநாட்டு அரங்கம், கொடி தோரணங்கள், வாழ்த்துப் பதாகைகள், தங்குமிடம், உணவு, மாநாட்டுப் பை, அழைப்பிதழ், அறிக்கை வடிவமைப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களிலும் புதுச்சேரி வரவேற்புக் குழு மிக சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது பாராட்டிற்குரியது. இரவு உணவும் கூட ஏற்பாடு செய்து வழியனுப்பினர். வரவேற்புக் குழுவின் தலைவர் தோழியர் கலைச்செல்வி, செயலாளர் தோழியர் ராஜேஸ்வரி, பொருளாளர் இளவரசி உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும், அனைத்து தோழர்களுக்கும், குறிப்பாக இரவு பகல் பாராமல் மாநாட்டின் வெற்றிக்கு உழைத்த-வழிகாட்டிய தலைவர்கள் மூத்த தோழர் வி.ராமகிருஷ்ணன், மாவட்ட உதவித் தலைவர் தோழர் என்.கொளஞ்சியப்பன், மாவட்டச் செயலாளர் தோழர் ஏ.சுப்பிரமணியன் உள்ளிட்ட அனைத்து தோழர்களுக்கும் நமது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநாட்டை சிறப்பித்த தோழர். உ.வாசுகி, அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் பி.அபிமன்யு, உதவிப் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.செல்லப்பா, மாநிலச் செயலாளர் தோழர் ஏ.பாபு ராதாகிருஷ்ணன், ஒப்பந்தத் தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் சி.வினோத்குமார் உள்ளிட்ட தலைவர்கள் அனைவருக்கும் நமது நன்றி ! அனைத்து பிரதிநிதிகளுக்கும் விதைப் பேனா வழங்கிய மாநிலக் குழு உறுப்பினர் தோழியர் எம்.மல்லிகாவுக்கு நமது நன்றி !

தமிழகம் முழுவதும் நிதியளித்த நல்லுள்ளங்களுக்கு நமது நன்றி !

மாநாடு வெற்றி பெறப் பாடுபட்ட அனைத்துத் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், மாநிலம் முழுவதிலிருமிருந்து வருகை தந்த தோழியர்களுக்கும், தோழர்களுக்கும் வாழ்த்துக்கள்!

"பெண்கள், நாம் அணி திரட்ட வேண்டிய தொழிலாளர் இயக்கத்தின் பகுதியே!" என்ற புரிதலோடு, வர்க்கப் போர் முனைகளில் எழுச்சிகரமான வீராங்கனைகளாக தமிழக பெண் தொழிலாளர்களை திரட்டிடும் இலக்கை நெஞ்சில் ஏந்தி முன்னேறுவோம் !

**தோழமை வாழ்த்துக்களுடன்,**

**ப. இந்திரா,**

**முன்னாள் மாநில அமைப்பாளர்.**

இணைப்பு : கலந்து கொண்டோர் விவரம்.

BSNL உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு

மூன்றாவது தமிழ் மாநில மாநாடு, 15.7.2018 - புதுச்சேரி

மொத்த சார்பாளர்கள் : 166

| எண் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை | 1 |
| 2 | வேலூர் | 2 |
| 3 | புதுச்சேரி | 33 |
| 4 | கடலூர் | 17 |
| 5 | தஞ்சை | 1 |
| 6 | திருச்சி | 5 |
| 7 | கும்பகோணம் | 5 |
| 8 | சேலம் | 20 |
| 9 | ஈரோடு | 19 |
| 10 | தர்மபுரி | 3 |
| 11 | கோவை | 29 |
| 12 | குன்னூர் | 2 |
| 13 | காரைக்குடி | 1 |
| 14 | மதுரை | 2 |
| 15 | விருதுநகர் | 7 |
| 16 | தூத்துக்குடி | 5 |
| 17 | திருநெல்வேலி | 3 |
| 18 | நாகர்கோவில் | 6 |
| 19 | மாநிலக்குழு உறுப்பினர் | 5 |

<u>மாவட்ட அமைப்பாளர்கள்</u>

| எண் | மாவட்டம் | மாநாட்டு தேதி | அமைப்பாளர் - தோழியர் |
|---|---|---|---|
| 1. | புதுச்சேரி | 8.6.2018 | என். ராஜேஸ்வரி |
| 2. | கடலூர் | 10.6.2018 | சற்குணவதி கனகசபை |
| 3. | கும்பகோணம் | 6.7.2018 | ஆர். லதா |
| 4. | சேலம் | 7.7.2018 | கே.எம். புவனேஸ்வரி |
| 5. | ஈரோடு | 7.7.2018 | டி. பத்மா |
| 6. | தர்மபுரி | 28.6.2018 | சுகந்தி பாஸ்கரன் |
| 7. | கோவை | 7.7.2018 | டி. விஜயகுமாரி |
| 8. | விருதுநகர் | 23.6.2018 | ஜி. தனலஷ்மி |
| 9. | திருநெல்வேலி | 7.7.2018 | வி. சீதாலஷ்மி |
| 10. | நாகர்கோவில் | 11.7.2018 | ஜி. களஞ்சியம் |